(இ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தமிழ் நாடு 1974-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

5. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (இரண்டாம்) திருத்த சட்ட முன்வடிவு அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாக இருப்பதாகக் கூறப்பட்டது குறித்தும் மூன்று திருத்தங்கள் ஒன்றாகக் கொண்டு வரப்பட்டிருப்பது குறித்தும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பாயின்ட் ஆப் ஆர்டர். ஒரு முக்கியமான விஷயம் இந்த மன்றத்தின் கவனத்திற்குக்கொண்டு வர விரும்புகிறேன். இதிலே மூன்று திருத்தங்கள் கொடுத்து இருக்கிறார்கள். ஒன்றாவது, செகன்ட் அமென்ட்மென்ட், இரண்டாவது தேர்ட் அமென்மென்ட், மூன்றாவது போர்த் அமென்ட்மென்ட் என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஒரே தொடரில் ஒரு சபையில் 3 திருத்தங்கள் கொண்டு வந்தது இது வரையில் கிடையாது. ஒரே தொடரில் ஒரே கூட்டத்தில் 3 திருத்தங்கள் கொண்டு வந்தது இதுவரையில் பிரிசிடென்ட் கிடையாது. நேற்று கூட துருவித் துருவிப் பார்த்தேன். ஒரு காம்பிரஹன்சிவ் சட்டமாகத்தான் கொண்டு வருவார்கள். இங்கே இதிலே கூட கான்ஸ்டிட்யூஷனல் ப்ரோவிஷனுக்கு 'அல்ட்ரா வயர்ஸாக' . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குத்தான் தீர்ப்பு ஏற்கனவே கொடுத்தாகிவிட்டது. அது இதற்கும் பொருந்தும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்கும், இந்த மன்ற உறுப்பினர்களுக்கும் சொல்கிறேன். கான்ஸ்டிட்யூஷனில் 290 (எ) பிரிவில் என்ன போட்டிருக்கிறது என்றால்—

A sum of forty-six lakhs and fifty thousand rupees shall be charged on and paid out of the Consolidated Fund of the State of Kerala every year to the Travancore Devaswom Fund; and a sum of thirteen lakhs and fifty thousand rupees shall be charged on, and paid out of the Consolidated Fund of the State of Tamil Nadu every year to the Devaswom Fund established in that State,